சிறகடித்துப் பறந்தார்கள். ஐந்து ஆண்டுக் காலமும் சட்டத்தின் ஆட்சியைத் துளிகூட எண்ணிப்பார்க்காத காரணத்தால்தான், இன்று கம்பிகளை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத் தொழிலாளர்களில் 92 சதவிகிதம் அமைப்புசாராத் தொழிலாளர்கள். அவர்களின் நலனை மேம்படுத்திட தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இவ்வாரியத்தின்மூலம் தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் பயன்பெறும்வகையில், பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர் நல மையங்களில் தையல் பயிற்சிப் பிரிவு, குழந்தைகள் காப்பகப் பிரிவு, படிப்பகங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கென ஓய்வு இல்லங்கள் இவ்வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அமைப்புசாராத் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும், அவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடனும், 1982 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சட்டம் இயற்றப்பட்டது. மேற்கண்ட சட்டத்தின்கீழ் 69 வகையான அமைப்புசாராத் தொழில்கள் அட்டவணைப்படுத்தப்பட்டன.

1994 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் முதல் அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியமான, கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாரியத்தில் 38 வகையான அமைப்புசாராத் தொழில்கள் அட்டவணைப்படுத்தப்பட்டன. மேலும், 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் ரூ.3¾ கோடி செலவில் கட்டுமான வாரியத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் சாதனைகள் தொடர்கின்றன. ஆனால், கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து நடந்த ஊழல் சாதனைகள் ஒன்றல்ல, இரண்டல்ல! அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரிய

மாவட்ட அலுவலகங்களுக்குத் தளவாடங்கள் வாங்கியதில் முறைகேடுகள் நடந்துள்ளன. தமிழ்நாடு கட்டுமான நல வாரியத் தொழிலாளர்களுக்கு மூக்குக் கவசம் மற்றும் தலைக் கவசம் ஆகியவற்றை வாங்கியதிலும், அவற்றை வழங்கியதிலும் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றன. பூச்சிமருந்து அடிப்பதிலும்கூட ஊழல் செய்து புதுமையைப் படைத்த புத்திசாலிகள், விஞ்ஞான முறையில் ஊழல் செய்து விருதுபெற்ற வித்தகர்கள், ஊழல்களின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் உலுத்தர்கள்.

மேலும், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு அதிக எண்ணிக்கையில் பயனாளிகளைக் காட்டும்விதமாக, அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களின் உறுப்பினர் விவரங்களைக் கணினியில் பதிவு செய்வதற்கு முறையற்ற வகையில் வாரியத்தின் நிதி பல இலட்சங்கள் வீணடிக்கப்பட்டுள்ளது. ஒரு உறுப்பினரின் விவரங்களைக் கணினியில் பதிவு செய்ய, டெண்டர் முறையைப் பின்பற்றாமல், சில மாவட்டங்களில் ரூ.3.25 என்றும், சில மாவட்டங்களில் ரூ.2.50 என்றும், ஒருசில மாவட்டங்களில் ரூ.2.80, ரூ.2.90 என்கிறவகையில் மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபட்ட தொகை செலவிடப்பட்டுள்ளது. ஆனால், இதற்காகும் செலவு ரூ.1.30 தான். இந்தக் கட்டணம் எதன் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டது என்பதற்கான விவரம் எதுவும் தெரியவில்லை.

அதுமட்டுமல்ல; கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் உள்ளிட்ட இதர நல வாரியங்களில் பணத்தை எடுத்து முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்குப் பாராட்டு விழா என்ற பெயரில் பத்திரிகை அடித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய் வீண் செலவு செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நலத் திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக மாவட்டந்தோறும் ஆடம்பர விழாக்களை நடத்தி, வாரிய நிதியிலிருந்து பல இலட்சம் ரூபாய் ஊதாரித்தனமாக மாநாட்டிற்கு தி.மு.க. அரசால் வீணடிக்கப்பட்டுள்ளது. எந்தவித சட்டமுறையையும் பின்பற்றாமல் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று வாரியத்திற்குச் சொந்தமான பணம் இலட்சக்கணக்கில் முறைகேடாகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாரியங்களில் உறுப்பினர்களும் முறையாகப் பதிவு செய்யவில்லை என்பதோடு பதிவிலும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது.

'கட்டி அழும்போதும் தாண்டவக்கோனே,

பிணத்தைக் கட்டி அழும்போதும் தாண்டவக்கோனே,

பணப் பெட்டி மேலே கண் வையடா தாண்டவக்கோனே' (மேசையைத் தட்டும் ஒலி) என்று தான் எழுதிய பாட்டின்படி, வாரியத் தொகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. வாரிய நிகழ்ச்சிகளையடுத்து, கருணாநிதியினுடைய கட்சியினர் மாநாடுகள் நடத்தினார்கள். இந்த அமைப்புசாராத் தொழிலாளர்களுடைய மாநாடு நடந்த இடத்தில் அன்று மறுநாள் நடத்தப்பட்டுள்ளது. இதற்கென்று உறுப்பினர்கள் சேர்த்து அங்கே கொண்டுபோய் அவர்கள் மாநாட்டில் அவர்களுடைய கட்சிக்காரர்கள் என்று கணக்கைக் காண்பித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"காகித ஓடம், கடலலை மீது போவதுபோலே மூவரும் போவோம்".

ஆம், அதில் எத்தனை பேர் போகப் போகிறார்கள் என்பது போகப் போகத்தான் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) மூவர் மட்டும் போவாரா, கனிமொழி போனார், ராஜா போனார், இன்னும் தயாநிதி போவார். இனி யார் போவார்கள் என்பது நீதிமன்றத்திற்கு மட்டும்தான் தெரியும். அதனால்தான் சீர்கெட்டு இருக்கும் நல வாரியங்கள் அனைத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் முறையாகச் செயல்படுத்த வைக்கவேண்டுமென்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தார்கள்.

முற்பகல் 10-35

2005-ல் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான், வாரிய உறுப்பினர்களின் பெண் குழந்தைகளுக்கு, 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பயில்வதற்கு, ஆண், பெண் இருபாலருக்கும், 10 ஆம் வகுப்பு தேர்ச்சிக்கும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சிக்கும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. "வாரியத்திலே சீர்கேடு; வழங்குதலில் முறைகேடு; அனைத்தையும் நீ போய் எடை போடு" என்று அறிவித்துவிட்டார்கள் அம்மா துணிவோடு! எனவே,